தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

31.10.2012 P.M

01.10.2012 A.M

## 1.60 லட்சம் ஹெக்டேரில் சம்பா பயிர்கள் மூழ்கின

வடகிழக்குப் பருவமழை மற்றும் வங்கக் கடலில் உருவான "நிலம்' புயல் எதிரொலியாக தஞ்சாவூர், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. மழை காரணமாக இதுவரை ஏறத்தாழ 1.60 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம்: தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது ஏறத்தாழ 44,000 ஹெக்டேரில் சம்பா சம்பா நடவுப் பணிகள் முடிவடைந்துள்ளன. இதில், கடந்த 10 நாள்களில் மட்டும் சுமார் 25,000 ஹெக்டேரில் நடவுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், திங்கள்கிழமை முதல் தொடர் மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 43.34 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

இதனால், கடந்த 15 நாள்களுக்குள் நடவு செய்யப்பட்ட இளம் பயிர்களைத் தண்ணீர் சூழ்ந்துள்ளது. காற்றுடன் மழை பெய்வதால், பல இடங்களில் வயல்களில் தண்ணீர் நிரம்பியுள்ளதுடன், இளம் பயிர்களும் சாய்ந்துள்ளன. சில இடங்களில் இளம் பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

இந்த மழை மேலும் சில நாள்களுக்குத் தொடர்ந்தால், வயல்களில் தேங்கியுள்ள தண்ணீர் வடிவதற்கு வாய்ப்பில்லை. இதனால், மிகுந்த சிரமத்துக்கு இடையே சம்பா நடவுப் பணிகளை மேற்கொண்ட விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் 8 ஆண்டுகளுக்கு பிறகு பலத்த மழை: நாகை மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இரவு முதல் தொடர்ந்து பெய்துவரும் மழையால் பெரும்பாலான பகுதியில் விளைநிலங்கள் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன. மாவட்டத்தின் அக்டோபர் மாத சராசரி மழையளவு 212 மி.மீ. ஆனால், நிகழாண்டில் கடந்த 16 நாள்களில் மட்டும் (வியாழக்கிழமை

காலை 8 மணி வரை) 626 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இது சராசரி அளவைவிட ஏறத்தாழ 3 மடங்கு அதிகம்.

கடந்த 2004 அக்டோபரில் ஏறத்தாழ 660 மி.மீ மழை பதிவானது. அதன் பின்னர், தற்போதுதான் மிக அதிக மழை பதிவாகியுள்ளது.

கீழ்வேளூர், நாகப்பட்டினம், திருக்குவளை, தலைஞாயிறு, வேதாரண்யம், குத்தாலம், மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய வட்டாரங்களில் சம்பா நெல் பயிர்கள் முழுமையாக நீரில் மூழ்கியுள்ளன.

மாவட்ட நிர்வாகத்தின் கணக்கெடுப்புப்படி, 51 ஆயிரம் ஹெக்டேரில் நேரடி விதைப்பு நெல் பயிர்களும், 13,500 ஹெக்டேரில் நடவு செய்யப்பட்ட நெற் பயிர்கள் முழுமையாகவும், 4 ஆயிரம் ஹெக்டேரிலான நேரடி விதைப்பு நெல் பயிர்களும், 12,200 ஹெக்டேரிலான நடவு நெற் பயிர்கள் பகுதியளவில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த மழை தொடரும் நிலையிலும், வயல்களில் தேங்கியுள்ள மழை நீரை வடியச் செய்யும் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்டம்: கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து இடைவெளியின்றி பெய்து வருகிறது. இதனால் வயல்களில் அதிகளவு தண்ணீர்த் தேங்கி நிற்பதுடன், அறுவடைக்குத் தயாராக இருந்த குறுவைப் பயிர்கள் மற்றும் நடவு மற்றும் நேரடி விதைப்பு செய்யப்பட்ட சம்பா பயிர்கள் மழைநீரால் சூழப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்து வரும் மழையால் திருவாரூர், நன்னிலம், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, முத்துப்பேட்டை ஆகிய வட்டாரங்களில் உள்ள 60,000 ஹெக்டேர் நெல் வயல்களில் மழைநீர் நிரம்பியுள்ளன.

மழையின் தாக்கம் குறைந்து தண்ணீர் விரைவாக வடிந்தால் மட்டுமே பயிர்கள் பாதுகாக்க முடியும். மழை தொடர்வதும், மழைநீர் வடிவதில் நீடிக்கும் தாமதம் பயிர்களை முற்றிலுமாக பாதித்து விடும் என்கின்றனர் விவசாயிகள்.

**தமிழகத்துக்கு 5.75 டிஎம்சி நீர் : காவிரிக் கண்காணிப்புக் குழு உத்தரவு : உபரியை வைத்து வழங்க கர்நாடகம் முடிவு**



நவம்பர் 1 முதல் 15ஆம் தேதி வரை தமிழகத்துக்கு 5.75 டிஎம்சி நீரை வழங்குமாறு கர்நாடக அரசுக்கு காவிரிக் கண்காணிப்புக் குழு புதன்கிழமை உத்தரவிட்டது.

கர்நாடக அணைகளைத் திறக்காமல் உபரி நீரை வைத்து மேற்சொன்ன 5.75 டிஎம்சி தண்ணீரை தமிழகத்துக்கு வழங்க அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.

காவிரிக் கண்காணிப்புக் குழுவின் 29-வது கூட்டம் அதன் தலைவரும் மத்திய நீர்வளத் துறைச் செயலருமான துருவ் விஜய் சிங் தலைமையில் தில்லியில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டம் தொடங்கியதும் மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் கர்நாடக அணைகளில் உள்ள நீரின் அளவு, தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரின் அளவு குறித்து திரையில் செயல்விளக்கம் காண்பித்தனர்.

தமிழக அணைகளில் நீர்மட்டம் அதிகரிக்கவில்லை: இந்தக் கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலர் தேவேந்திரநாத் சாரங்கி பேசியது: காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படி தமிழகத்துக்கு இந்த ஆண்டு கர்நாடகம் இன்னும் 48 டிஎம்சி நீர் வழங்க வேண்டியுள்ளது.

தென்மேற்குப் பருவமழை இந்த ஆண்டு குறைவாகப் பெய்துள்ளது. தற்போது வடகிழக்குப் பருவமழையும் கடலோர மாவட்டங்களில் மட்டும் பெய்து வருகிறது. இதனால் தமிழக அணைகளில் நீர்மட்டம் அதிகரிக்கவில்லை. இந்த ஆண்டு அக்டோபர் 16 முதல் 31ஆம் தேதி வரை தமிழகத்துக்கு 8.85 டிஎம்சி நீர் வழங்க வேண்டும் என்று கடந்த காவிரிக் கண்காணிப்புக் கூட்டத்தில் உத்தரவிடப்பட்டது. அதில், இன்னும் 1.75 டிஎம்சி நீரை கர்நாடகம் வழங்க வேண்டும்.

காவிரி நடுவர் மன்றம் அனுமதித்த பரப்பளவைவிட கர்நாடகத்தில் அதிகமான பரப்பில் பாசனம் நடைபெற்று வருகிறது.

வறட்சி காலங்களில் வழங்க வேண்டிய நீரை கர்நாடகம் முழுமையாக வழங்காத காரணத்தால்

தமிழகத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்று சாரங்கி கூறினார்.

குடிநீர்ப் பிரச்னை ஏற்படும்... இதையடுத்து கர்நாடக மாநிலத் தலைமைச் செயலர் எஸ்.வி. ரங்கநாத் பேசியது:

தமிழகம் கோரும் நீரை கர்நாடகம் வழங்கினால் மாநிலத்தில் குடிநீர்ப் பிரச்னை ஏற்படும். கடந்த கூட்டத்தில் பிறப்பித்த உத்தரவை கர்நாடகம் செயல்படுத்தி உள்ளது. தற்போதைய உத்தரவையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரங்கநாத் உறுதியளித்தார்.

5.75 டிஎம்சி நீர்: இருதரப்பு முறையீடுகளையும் கேட்ட குழுத் தலைவர் துருவ் விஜய் சிங் பிறப்பித்த உத்தரவு:

கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மீதமுள்ள 1.75 டிஎம்சி நீரை நவம்பர் 4உம் தேதிக்குள் கர்நாடகம் தமிழகத்துக்கு முதலில் வழங்க வேண்டும். நவம்பர் 1 முதல் 15ஆம் தேதி வரை கர்நாடகம் தமிழகத்துக்கு 4 டிஎம்சி நீரை வழங்க வேண்டும். அதாவது நிலுவையுடன் சேர்த்து மொத்தம் 5.75 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

உபரி நீர் வழங்கப்படும்: நவம்பர் மாதத்துக்கு காவிரிக் கண்காணிப்புக் குழு நிர்ணயித்த நீரின் அளவு தமிழகத்துக்கு திருப்தியளிக்கும் வகையில் உள்ளதாக மாநில அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார்.

""காவிரிக் கண்காணிப்புக் குழு நிர்ணயித்த நீரின் அளவை கர்நாடகத்தில் உள்ள அணைகளைத் திறக்காமலேயே அணைகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் சேரும் நீரை வைத்து தமிழகத்துக்கு வழங்கப்படும் என்று கூட்டத்துக்குப் பிறகு கர்நாடக மாநில அரசின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

காவிரிக் கண்காணிப்புக் குழு எடுக்கும் முடிவுக்கு கர்நாடக அரசு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும் என்றும் காவிரி நதிநீர்ப் பிரச்னை தொடர்பான அனைத்து விவகாரங்கள் குறித்தும் கண்காணிப்புக் குழு விவாதித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டது நினைவுகூரத்தக்கது.

கர்நாடக விவசாயிகள் எதிர்ப்பு

மைசூர், அக்.31: தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடக விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

காவிரி நதி நீர் பாதுகாப்புக் குழுத் தலைவர் ஜி.மாதேகெப்டா கூறியது:

தமிழகத்தில் பெய்துவரும் மழை, அந்த மாநிலத்தின் அணைகளின் நீர்மட்டத்தை உயர்த்தியுள்ளது. கர்நாடகத்தில் காவிரி நதிப் படுகை அணைகளில் போதுமான தண்ணீர்

இல்லை. தமிழகத்துக்கு கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடக் கூடாது. மீறினால் மீண்டும் போராட்டத்தில் குதிப்போம் என்றார்.

31st oct 2012 P.M

**உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகைகளுக்கு விண்ணப்பிக்கலாம்**

தமிழக அரசின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உதவித் தொகைப் பெற தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ளவர்களிடமிருந்து கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண நிவாரணத் தொகை, விபத்து மரண நிதி உதவி ஆகிய இனங்களின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இந்த உதவித் தொகைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள், தங்களது கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வர், சமூகப் பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்டாட்சியர்களிடம் விண்ணப்பிக்கலாம்.

உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை வைத்துள்ளவர்களில் 60 வயதுக்கும் மேற்பட்ட விவசாயக் கூலித் தொழிலாளர்கள் விண்ணப்பம் செய்த உடனடியாக, மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆடுகள் வளர்க்க மலைவாழ் மக்களுக்கு மானியம் வழங்கல்**

விருதுநகர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் மலைவாழ் மக்களுக்கு ஆடுகள் வளர்க்கும் திட்ட பயனாளிகளுக்கு முழு மானியத் தொகையை ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் வழங்கினார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு ஆட்சியர் டி.என்.ஹரிஹரன் தலைமை வகித்து துறை ரீதியாக ஆய்வு செய்து பேசியதாவது: பொதுமக்கள் அளிக்கும் பட்டா மாறுதல், வீட்டு மனைப் பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை கேட்டு வரும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை

எடுக்க வேண்டும். பட்டா வழங்குவதற்கு நேரில் சென்று ஆவணங்கள் மற்றும் அதன் நம்பகத்தன்மை குறித்து தீவிரமாக விசாரணை செய்து தாமதமில்லாமல் அளிக்க வேண்டும் என கூறினார்.

அதையடுத்து, சிவகாசி கண்டியாபுரம் அகதிகள் முகாமைச் சேர்ந்த பெண்களுக்கு அவர்களது வாழ்க்கை தரத்தை உயர்த்தும் வகையில் சமூக நலத்துறை சார்பில் 36 பேருக்கு தலா ரூ.3310 மதிப்பிலான தையல் இயந்திரங்களையும்,ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் மலைவாழ் மக்கள் 20 பேருக்கு ஆடுகள் வளர்ப்பதற்கு முழு மானியத் தொகையாக தலா ரூ.15 ஆயிரமும்,முதியோர் உதவித் தொகை திட்டத்தில் 2 பேருக்கு ரூ.1000 உதவிக் தொகை பெறுவதற்கான உத்தரவு என மொத்தம் ரூ.4.11 லட்சத்தில் 58 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## கால்நடை வளர்ப்பு பயிற்சி முகாம்

ராஜபாளையத்தில் உள்ள தமிழநாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் ராஜபாளையம் மற்றும் சுற்றுவட்டார கிராமப்புற விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இவர்களுக்கு பயிற்சிமையத் தலைவர் உதவிப் பேராசிரியர் ரா.தங்கத்துரை பயிற்சியளித்தார். கால்நடைகளுக்கு மழைக் காலத்தில் ஏற்படும் நோய்கள், மற்றும் நோய்பரவாமல் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கிப் பேசினார்.

## பசுக்களுக்கு அரிசி உணவு கூடாது '

கறவைப் பசுக்களுக்கு அரிசி உணவை அதிக அளவு கொடுக்கக் கூடாது என்றும், இதனால் கறவை மாடுகள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாகவும் ஆட்சியர் விஜய் பிங்ளே எச்சரித்துள்ளார்.

கறவை பசுக்கள், ஆடுகள் அதிக அளவு மாவுச்சத்துப் பொருளை உண்பதால் வயிறு உப்பசம் (அமிலத்தன்மை நோய்) ஏற்பட்டு கால்நடைகள் இறக்கும் நிலை ஏற்படும்.
மேலும், கறவை பசுவின் இனவிருத்தி தன்மை குறைந்து தனது ஆயுல்காலத்தில் சராசரியாக 10 கன்றுகளை ஈன்ற வேண்டிய பசுக்கள், ஆடுகள் 5 முதல் 6 கன்றுகளை மட்டுமே ஈனக்கூடிய நிலைக்கு ஆளாகும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## காளான் வளர்ப்பு இலவச பயிற்சி

கிருஷ்ணகிரியில் இளைஞர்களுக்கு காளான் வளர்ப்பு மற்றும் சந்தைப்படுத்ததுதல் குறித்து இலவச பயிற்சி வழங்கப்பட உள்ளது.

ஹைதராபாத்தில் செயல்பட்டு வரும் மத்திய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனமான என்ஐஆர்டி நிதி உதவியுடன் கிருஷ்ணகிரி அணை மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் நவம்பர் மாதம் 3-வது வாரத்தில் இளைஞர்களுக்கு காளான் வளர்ர்ப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து 10 நாள்கள் இலவச வேலை வாய்ப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட உள்ளது.

இந்த பயிற்சியில் ஆண், பெண் இரு பாலரும் கலந்து கொள்ளலாம். பயிற்சி நாள்களில் நிறுவனத்திலேயே தங்கி பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தங்குமிடம், உணவு மற்றும் பயிற்சி ஆகியவை இலவசமாக வழங்கப்பட உள்ளது.

காளான் வளர்த்தல் பயிற்சி பெற்று அதனை சுயதொழிலாக கொண்டு வருவாய் ஈட்டக்கூடிய வாய்ப்புள்ளதால், இதனை இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்லாம்.

ஏற்கெனவே கடந்த மார்ச் மற்றும் ஏபரல் மாதத்தில் பயிற்சி பெற்றவர்கள், இதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

ஆர்வமுள்ளவர்கள், ஒரு வார காலத்திற்குள் 04343-240416 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தங்களது பெயரினை பதிவு செய்துகொள்ள வேண்டும். தொடர்புக்கு: து.ராமச்சந்திரன், உதவி இயக்குநர், மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம், கிருஷ்ணகிரி அணை, 94430 54536.

## சோலையார் அணையின் நீர்மட்டம் 143 அடியாக குறைவு

மழை பெய்யாததால் வால்பாறை அடுத்த சோலையார் அணையின் நீர்மட்டம் 143 அடியாக குறைந்தது.

வால்பாறை பகுதியில் இந்த வருடம் பருவ மழை மிக குறைவாகவே பெய்துள்ளன. ஓவ்வொரு ஆண்டும் பருவ மழை இரண்டு மாதம் இடைவிடாது பெய்யும். இதில் சோலையார் அணை மூன்று முறையாவது நிரம்பிவிடும். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாக மழை அளவு குறைந்து காண்பபடுகிறது. இந்த வருடமும் மழை மிக குறைவாக பெய்த நிலையில் கடந்த மாதம் 13ம் தேதி ஓரு வார காலம் இடைவிடாது பெய்த மழைக்கு 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணை நிரம்பியது. இந்நிலையில் தற்போது மழை பெய்யாததால் அணையின் நீர்மட்டம் கனிசமாக குறைந்து தற்போது 143 அடியாக உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

01.11.2012 A.M

**விவசாயிகள் விதையை காய வைப்பது மிக அவசியம்**

தூத்துக்குடி:விதையை காய வைப்பதின் அவசியம் குறித்து வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.விதையை காயவைப்பது என்பது விதையின் ஈரபதத்தை பாதுகாப்பான ஈரப்பதம் வரும்வரை காயவைப்பது ஆகும். ஒவ்வொரு விதைக்கும் அதன் தன்மை, சேமிப்பின் நோக்கம், சேமிக்க பயன்படுத்தப்படும் பைகளைப் பொறுத்து பாதுகாப்பான ஈரப்பதம் வேறுபடும். விதையை காயவைப்பது விதையினை உயிருடனும் நல்ல வீரியமுடனும் சேமிக்க முக்கிய காரணமாகும். இல்லையெனில் சீக்கிரமே பூஞ்சானங்களாலும், வெப்பத்தினாலும் மற்றும் அதிக நுண்ணுயிர் தாக்குதலாலும் கெடுகிறது. விதைகளை இரண்டு முறையில் நாம் காயவைக்கலாம். ஒன்றாவது சூரிய ஒளியில் நல்ல சிமிண்ட் தளத்தில் காயவைப்பது, இரண்டாவது இயந்திரங்கள் மூலம் சுடுகாற்றை விதை கலங்களில் அனுப்பி காயவைப்பது. விதையை அறுவடை முடிந்த உடன் காயவைத்து பாதுகாப்பான ஈரப்பதத்திற்கு கொண்டுவந்து சேமிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு மாதம் கழித்து காயவைக்கம் போது அறுவடை சூட்டுடன் மூடையிட்டதால் விதைகள் கெட்டியாகி அடைகளாக மாறியிருக்கும். நிறம் மங்கி இருக்கும், முளைப்புத்திறன் குறைந்திருக்கும். பொதுவாக விவசாயிகள் சூரிய ஒளியில்தான் விதைகளை காயவைக்கிறார்கள்.

விதைகளை காயவைக்கும் போது சில முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். ஒன்றாவது ஈரமான அழுக்கான மண்களத்தில் போடக்கூடாது. இரண்டாவது களத்தில் ஒரே வயலில் இருந்து பெறப்பட்ட ஒரே பயிர் ஒரே ரகத்தைதான் ஒரு நேரத்தில் கையாள வேண்டும். மூன்றாவது உச்சி வெயிலில் விதைகளைகாய போடகூடாது. அந்த நேரத்தில் விதைகளை குவித்து தார்பாய் போட்டு மூடிவைக்க வேண்டும். உச்சி வெயிலில் உள்ள புற ஊதா

கதிர்கள் முளைப்புதிறனை பாதிக்கும். நான்காவது விதைகளை அதிகமாக காயவைக்கக் கூடாது. விதை மணிகளில் வெடிப்பு ஏற்பட்டு கருசிதைவு ஆகி முளைப்புதிறன் பாதிக்கும். இதனை கருத்தில்கொண்டு விதைப்பயிர் விவசாயிகள், உற்பத்தியாளர்கள் விதைகளை காயவைப்பதில் தனி அக்கறை காட்ட வேண்டும் என தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி மற்றும் நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளனர்.

## தக்காளிவிலை "கிடுகிடு '

ராமநாதபுரம்:ராமநாதபுரத்தில் கடந்த வாரம் கிலோ ரூ.10க்கு விற்ற தக்காளி நேற்று 20க்கு விற்றப்பட்டது. காய்கறி விலை விபரம் (கிலோவில்): தக்காளி ரூ. 20, கத்தரி 40, உருளை 40, முள்ளங்கி 40, பீட்ரூட் 40, கேரட் 40, நூக்கல் 40, பீர்க்கங்காய் 40, வெண்டைக்காய், அவரை 40, பீன்ஸ் 50, பட்டாணி 60, புடலங்காய் 40, பெரிய வெங்காயம் 20, சிறிய வெங்காயம் 50, சவ்சவ் (1) 10, முருங்கைக்காய் 5, மூன்று வாழைக்காய் 10, தேங்காய் (1) 5 முதல் 10 வரை, எலுமிச்சை (2) 5 ரூபாய்க்கு விற்கப்பட்டது.பழங்கள்: ஒரு கிலோ ஆப்பிள் 120, ஆரஞ்ச் 80, திராட்சை 60, பப்பாளி 30, மாதுளை 120, கொய்யா 60க்கு விற்கப்படுகிறது.

## உழவர் பாதுகாப்பு அட்டை முகாம்

சிவகங்கை:உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பயன்பெற, நவ.,5 முதல் 9 முடிய வருவாய் கிராமங்களில், சிறப்பு முகாம் நடத்தப்படஉள்ளன.உழவர் பாதுகாப்பு திட்டத்தில், அடையாள அட்டை பெறுவோர், பென்ஷன், திருமண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவு தொகை, விபத்துநிவாரண உதவி தொகை வழங்கப்படும். இதற்காக, விண்ணப்பங்கள் வழங்கப்பட உள்ளன. இதற்காக, ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும், நவ., 5 முதல் 9ம் தேதி வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இதில், விவசாயிகள் பங்கேற்று விண்ணப்பிக்கலாம். முகாம்கள் நடைபெறும் இடம் குறித்து, அந்தந்த பகுதி வி.ஏ.ஓ.,க்கள் அறிவிப்புசெய்வர் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆவுடையானூரில் மண்புழு கழிவு உரம் தயாரித்தல்

தென்காசி:ஆவுடையானூரில் மண்புழு கழிவு உரம் தயாரித்தல் பயிற்சி நடந்தது.கீழப்பாவூர் வட்டாரம் ஆவுடையானூரில் மண்புழு கழிவு உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சவுந்திரராஜன் தலைமை வகித்தார். ஆவுடையானூர் பஞ்.,தலைவர் இந்திரா முன்னிலை வகித்தார். கீழப்பாவூர் வேளாண்மை உதவி இயக்குநர் நல்லமுத்துராசா தலைமை வகித்து வரவேற்றார்.வேளாண்மை அலுவலர் ராமர் மண்புழு கழிவு உரம் தயாரிப்பது குறித்து பயிற்சி அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் நமச்சிவாயம் மண்புழு கழிவு உரம் தயாரிப்பு செயல் விளக்கம் செய்து காட்டினார். பயிற்சியில் பங்கேற்ற 50

விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் கண்ணன், ரமேஷ் செய்திருந்தனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் துவக்கம்

அம்பாசமுத்திரம்:நெல்லை மாவட்டத்தில் உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் இன்றும், நாளையும் (1,2ம் தேதிகளில்) வி.ஏ.ஓ., அலுவலகங்களில் வைத்து நடக்கிறது. இம்முகாமில் மனுக்களை வழங்கி பயனடையுமாறு பொதுமக்களை சேரன்மகாதேவி சப்-கலெக்டர் ரோகிணி கேட்டு கொண்டார்.தெற்கு பாப்பான்குளத்தில் தமிழக வீட்டு வசதி வாரிய தலைவர் முருகையாபாண்டியன் முன்னிலையில், கிராம பஞ்சாயத்து அலுவலக கட்டடத்தை திறந்து வைத்து, சேரன்மகாதேவி சப்-கலெக்டர் ரோகிணி பேசியதாவது:பஞ்., அலுலகம் சிறிய கட்டடமாக இருந்தாலும், ஜனநாயக முக்கியதுவம் வாய்ந்த இடம். மக்களின் தேவைகள், திட்டங்கள் முடிவு செய்யப்படுகின்ற இடம் பஞ்., அலுவலகம் தான். இதை திறந்து வைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.ஏற்கனவே நமது மாவட்டம் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாவட்டம். ஒவ்வொருவரும் தங்களது வீடு, ஊரை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். காய்ச்சல் கண்டவுடன் அரசு ஆஸ்பத்திரியில் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் இன்றும் (1ம் தேதி), நாளையும் (2ம் தேதி) வி.ஏ.ஓ., அலுவலகங்களில் நடக்கிறது. இத்திட்டத்தின் கீழ் திருமண உதவி, கல்வி உதவி தொகை, விபத்து உதவிகளை பெற இம்முகாம்களில் மனுக்களை வழங்கலாம்.தமிழக அரசு அறிவித்துள்ள தாலிக்கு தங்கம் திட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 படித்தவர்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் 25 ஆயிரம் ரூபாயும், டிகிரி படித்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இந்த வித்தியாசம் ஏன் என்றால் அனைவரும், பெண் குழந்தைகளை எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 உடன் நிறுத்தி விடாமல் பட்டதாரியாக்க வேண்டும் என்பதற்காகத் தான்.இவ்வாறு சப்-கலெக்டர் ரோகிணி பேசினார்.

## பசுவதை சட்டத்தை நடைமுறைப்படுத்த கோரிக்கை

ஓசூர்: "பசுவதை தடை சட்டத்தை நடை முறைப்படுத்த வேண்டும்' என, ஓசூர் விஷ்வ ஹிந்து பரிஷத் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர்.ஓசூர், ராமர் கோவிலில், தமிழ்நாடு விஷ்வ ஹிந்து பரிஷத் ஊழியர் கூட்டம் நடந்தது. மாவட்ட தØலைவர் குஷன் சிங் தலைமை வகித்தார். செயலாளர் சூரி முன்னிலை வகித்தார். நகர, ஒன்றிய, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்."பசு வதை தடை சட்டத்தை தமிழகத்தில் நடை முறைப்படுத்தி, பசுக்கள் இறைச்சிக்காக சித்ரவதை செய்து கொல்வதை தமிழக அரசு தடுக்க வேண்டும். ஓசூரில் பக்ரீத் பண்டிகைக்காக பசுக்களை வெட்டுவதை எதிர்த்த ஹிந்து அமைப்பினர் ஆறு பேரை போலீஸார்

கைது செய்து, அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு கடும் கண்டம் தெரிவிப்பது' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

**இலவச ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்துக்கு இலவசமாக வழங்கப்பட்ட ஆடுகளுக்கு நவ., 3ல் குடற்புழு நீக்கத்துக்கான முகாம் நடக்கிறது.கடந்த சட்டசபை தேர்தலின் போது, அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில், "தமிழக அளவில் கிராமப்புற ஏழைகள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய, வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள விவசாய குடும்பங்களுக்கு, நான்கு ஆடுகள் வழங்கப்படும். குறிப்பிட்ட கிராமங்களை தேர்ந்தெடுத்து, அதில் ஒரு குடும்பத்துக்கு, ஒரு கறவை மாடு வீதம், 60 ஆயிரம் மாடுகள் வழங்கப்படும்' என, அறிவிக்கப்பட்டது.மிகப்பெரிய திட்டமான ஆடு, மாடு வழங்கும் திட்டத்தை, முதல்வர் நடைமுறைப்படுத்தி வருகிறார். வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தினருக்கு இலவசமாக நான்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு ஏற்படும் நோய்களை கண்காணித்து, தகுந்த சிகிச்சை அளிக்க கால்நடைத்துறைக்கு அரசு உத்தரவிட்டது.அதன்படி, 2011-12ம் ஆண்டில், 3,775 பயனாளிகளுக்கு, 4.81 கோடி செலவில், 15 ஆயிரத்து, 100 ஆடுகள், 2012-13 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை, 2,946 பயனாளிகளுக்கு, 3.75 கோடி செலவில், 11 ஆயிரத்து, 784 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் விதமாக, அக்., 3ம் தேதி ஈரோடு மாவட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும், இலவசமாக குடற்புழு நீக்கம் முகாம் நடத்த கால்நடை பராமரிப்பு துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் திட்ட பயனாளிகள் அனைவரும் தவறாது தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ள கலெக்டர் சண்முகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெண்டை விளைச்சலுடன் விலையும் உயர்வு**

ஈரோடு: ஈரோடு மாவட்டம் முகாசிஅனுமன்பள்ளியில், வெண்டைக்காய் விளைச்சல் ஜோராக இருப்பதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, வாழை, மஞ்சள், நெல் ஆகியவை அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தவிர, விவசாயிகள் தங்கள் விளைச்சல் நிலங்கள் சாகுபடி செய்த நிலங்கள் போக மீதமுள்ள நிலத்தில் உபரி வருமானத்துக்காக காய்கறி செடிகளையும் வளர்த்து வருகின்றனர்.காய்கறி விற்பனை நிலையத்தில், அனைத்து காய்கறி விலைகளும் கணிசமாக உயர்ந்துள்ளதால், தக்காளி, கீரை, சின்னவெங்காயம், சேனை கிழங்கு, கத்தரிக்காய், வெண்டைகாய் ஆகியவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், முகாசி அனுமன்பள்ளியில், வெண்டைக்காயின் விளைச்சல் ஜோராக

இருப்பதாக, அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

முகாசிஅனுமன்பள்ளி விவசாயி கோபாலகிருஷ்ணன் கூறியதாவது:என்னுடைய இரண்டு ஏக்கர் நிலத்தில், ஒன்றரை ஏக்கருக்கு நெல் சாகுபடியும், மீதமுள்ள நிலத்தில் வெண்டைக்காய் சாகுபடியும் செய்துள்ளேன்.ஏக்கருக்கு ஒரு கிலோ விதை விதைத்தால், 400 கிலோ வெண்டைக்காய் கிடைக்கும். இலைக்கு ஒரு காய் வீதம், செடிக்கு, 32 காய் காய்க்கும்.வீட்டுக்கு தேவையான காய்கறிகள் போக மீதமுள்ள காய்கறியை மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக கொடுத்து விடுவோம். கடந்த முறை கிலோ ஒன்றுக்கு, 23 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.கடந்த சில மாதமாக வெண்டைக்காய் சாகுபடி விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்து வருகிறது. தற்போது ஒரு கிலோ வெண்டைக்காயை, வெறும் பத்து ரூபாய்க்கு மட்டும் வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். ஆனால் மார்க்கெட்டில் இதே வெண்டைக்காயை வியாபாரிகள், 32 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால், செடிகள் நன்கு வளர்ந்து செழித்துள்ளதால், கூடுதல் காய் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## மக்காச்சோளம் விலை உயரவாய்ப் பு: இயக்குனர் தகவல்

கரூர்: மக்காச்சோளத்துக்கு விலை உயர வாய்ப்புள்ளதாக, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: பருவமழை தவறியதால், கரீப் பருவத்தில் மக்காச் சோளம் பயிரிடுவது அனைத்து மாநிலங்களிலும் குறைந்துள்ளது. நடப்பு பருவத்தில், தமிழகத்தில் அதிகளவில் மக்காச்சோளம் சாகுபடி குறைந்து விட்டது. 30 சதவீத விதைப்பு மட்டுமே உள்ளதாக வர்த்தக சங்கங்கள் தெரிவிக்கின்றன. கர்நாடகாவில் இருந்து மக்காச்சோளம் வரத்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதனால், நவம்பர் மாதம், ஒரு குவிண்டாலுக்கு, 50 ரூபாய் முதல், 100 ரூபாய் வரை, விலை குறைய வாய்ப்புள்ளது. கரீப் பருவத்தில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம், அனைத்து மாநிலத்தில் இருந்தும் வர துவங்கியுள்ளன.

இந்நிலையில், அறுவடை செய்த மக்காச்சோளத்தை உடனடியாக விற்பனை செய்வதா அல்லது சேமித்து வைப்பதா என விவசாயிகள் அறிய ஆவலோடு உள்ளனர்.அதன் அடிப்படையில், திருப்பூர் மாவட்டம் உடுமலை பேட்டை சந்தையில், கடந்த, 15 ஆண்டுகளாக நிலவி வந்த மக்காச்சோள விலைகள் ஆய்வு செய்யப்பட்டது. அதன்படி, மக்காச்சோளம் குவிண்டால் ஒன்றுக்கு, 1,350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், நவம்பர் மாதத்தில் விலை குறையும். ஆனால் டிசம்பர் மாதத்தில் மக்காச்சோளம் குவிண்டால் விலை, 1,400 வரை உயர வாய்ப்புண்டு.தரமான மக்காச்சோளத்துக்கு விலையும் அதிகமாக கிடைக்கும். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 100 கிலோ மக்காச்சோளத்தை சேமிக்க, மாதம், ஒன்றுக்கு,

1.50 பைசா வரை செலவாகும். வரும் டிசம்பர் மாதம் ஏற்படும் விலை உயர்வு, மக்காச்சோளத்தை சேமிக்க செய்த செலவை ஈடுகட்டும்.எனவே, மக்காச்சோளத்தை சேமிக்க வசதியுள்ள விவசாயிகள், வரும் டிசம்பர் மாதம் வரை வைத்து கொள்ளலாம். நவம்பர் மாதம் விலை குறைய வாய்ப்புள்ளதால், வசதியில்லாத மாவட்ட, ஒன்றிய விவசாயிகள், மக்காச்சோளத்தை அறுவடை செய்தவுடன் விற்பனை செய்து கொள்ளலாம்.

**உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்**

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும், 5 முதல், 9ம் தேதி வரை நடைபெறும் முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு, கலெக்டர் விஜய்பிங்ளே வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது குறித்து கலெக்டர் விஜய்பிங்ளே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
மாவட்டத்தில், 18வயதுக்கு மேற்பட்ட, 65 வயதுக்குட்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த கூலி தொழிலாளர்களின் குடும்ப நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு உழவர் பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பெண் உறுப்பினர்களுக்கு தலா, பத்து ஆயிரம் ரூபாய், ஆண் உறுப்பினர்களுக்கு தலா, 8,000 ரூபாய் வீதம் திருமண உதவி தொகை வழங்கப்படுகிறது.

இது தவிர, 60 வயது நிறைவடைந்தவர்களுக்கு மாதம், ஆயிரம் ரூபாய் உதவி தொகை, விபத்தில் மரணமடையும் உறுப்பினருக்கு, ஒரு லட்சத்து, 2,500 நிவாரணதொகை, உடல் உறுப்புகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, 20 ஆயிரம் ரூபாய் முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை இழப்பீட்டு வழங்கப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் உறுப்பினரை சார்ந்த நபர்களுக்கு கல்வி உதவி தொகை, ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் முதல் முதுநிலை பட்டப்படிப்பு வரையும், மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளுக்கு வீட்டில் இருந்து கல்வி நிறுவனம் சென்று வரும் மாணவ - மாணவிகளுக்கு, 1,250 முதல், 4,750 ரூபாய் விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு அவர்களின் படிப்புக்கேற்ப 1,450 முதல், 6,750 ரூபாய் வரை உதவி தொகை வழங்கப்படுகிறது.இதுபோன்று பல்வேறு உதவி தொகைகளை பெற இத்திட்டத்தின் அடையாள அட்டை பெறுவது அவசியம், அடையாள அட்டை பெறுவதற்கான சிறப்பு முகாம் மாவட்டம் முழுவதும் நவம்பர், 5ம் தேதி முதல், 9ம் தேதி வரை நடக்கவுள்ளது.இந்த நாள்களில் பொது மக்கள் தங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள வி.ஏ.ஓ.,விடம் விண்ணப்பங்களை சமர்பித்து பயன்பெறலாம். மேலும் விவரங்களுக்கு வி.ஏ.ஓ., சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர்களை அணுகலாம், என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரவை தாமதத்தால் விவசாயிகளுக்கு இழப்பு கரும்புக்கு நஷ்டஈடு வழங்க கோரிக்கை**

மோகனூர்: அரவைப்பணி தாமதத்தால், எடை குறைந்து, புளிப்புத்தன்மை அடைந்ததால், பெரும் இழப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்க வேண்டும், என சக்கரை ஆலை நிர்வாகத்திடம், கோரிக்கை விடுக்கப்பட்டது.நாமக்கல் மாவட்டம், மோகனூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. இந்த ஆலைக்கு, நாமக்கல், சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள, எட்டு கோட்டங்களில் இருந்து, அறுவடை செய்யப்பட்ட கரும்பு அரவைக்கு அனுப்பப்படுகிறது. இந்த ஆலையின் மொத்த கொள்ளவு, 4.30 லட்சம் டன்.நடப்பு ஆண்டு அரவை செப்டம்பர், 29ம் தேதி துவங்கியது. நடப்பு ஆண்டு, 80 ஆயிரம் டன் குறைவாக கரும்பு அரைக்க முடிவு செய்து, அதற்கேற்ப பதிவும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 7,000க்கும் அதிகமானோர், ஆலைக்கு கரும்பு சப்ளை செய்ய பதிவு செய்துள்ளனர். மொத்தம், 8,263 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது.கடந்த, 1ம் தேதி கரும்பு அரவை பணி துவங்கிய, மூன்று மணி நேரத்தில் அரவை இயந்திரத்தின் பேரிங் உடைந்தது.

அதனால், அரவைப்பணி நிறுத்தப்பட்டது. அதை தொடர்ந்து, அரவைக்கு கொண்டு வரப்பட்ட கரும்புகள் புகளூர், ஆப்பக்கூடல் மற்றும் பெட்டவாய்த்தலை மில்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.அரவை பணி துவங்காததால், வண்டியிலேயே கரும்புகள் நிறுத்தி வைக்கப்பட்டதால், கரும்புகள் காய்ந்து எடைகள் குறைந்துபோனது. மேலும், புளித்து போனதால், அரவைக்கு எடுத்துக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டது.இந்நிலையில், விவசாயிகள் சந்திப்பு கூட்டம், ஆலை வளாகத்தில் நடந்தது. "அரவை துவங்கிய போது, பேரிங் உடைந்ததால், அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் காரணமாக, எடை குறைந்ததுடன், புளிப்புதன்மை அடைந்ததால், மாற்ற ஆலைகள் அரவைக்கு எடுத்துக்கொள்ளாமல், திருப்பி அனுப்பி விட்டனர். அதனால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், அதற்குரிய இழப்பீட்டுத்தொகை வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.அதற்கு, ஆலையின் தனி அதிகாரி மலர்விழி, சர்க்கரைத்துறை ஆணையரிடம் கூறி நடவடிக்கை எடுப்பதாக பதில் அளித்தார்.

## கேரளாவில் கோழி விலை உயர்ந்தது



வெளி மாநில கோழிகளுக்கு, கேரள அரசு தடை விதித்துள்ளதால், அதன் விலை கிடு கிடு.. வென உயர்ந்து வருகிறது.தமிழகம், கர்நாடகா ஆகிய அண்டை மாநிலங்களில் இருந்துதான் கேரளாவிற்கு, அதிக அளவிலான கோழிகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

பறவை காய்ச்சல் கேரளாவில் விற்பனையாகும் கோழிகளில், வெளி மாநிலங்களின் பங்களிப்பு, 70 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. இந்நிலையில், கடந்த வாரம், பெங்களூரு அருகே ஹேசரகட்டாவில், பறவைக் காய்ச்சல் காரணமாக, 4,265 வான் கோழிகள் இறந்தன.

இதையடுத்து, வெளி மாநில கோழிகளை கேரளாவிற்கு கொண்டு வர, அம்மாநில அரசு சென்ற திங்களன்று தடை விதித்தது. இதனால், கேரளாவில் உள்ளூர் கோழிகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன.

இதன் காரணமாக, கோழி விலை மிகவும் அதிகரித்து வருகிறது. கடந்த வாரம், கிலோ 80 ரூபாய்க்கு விற்பனையான, உயிருள்ள கோழியின் விலை, தற்போது 86 ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, மேலும் அதிகரிக்கும் என, கோழி வியாபாரிகள் தெரிவித்தனர். சென்ற 2011ம் ஆண்டு புள்ளி விவரப்படி, கேரளாவில் 6,000 கோடி ரூபாய் மதிப்பிற்கு மாமிச உணவுகள் விற்பனையாகிஉள்ளன.

கோழி இறைச்சி:கேரள மக்கள், நாளொன்றுக்கு, 5,000 டன் மாமிசம் உண்பதாக, கால்நடை துறை மதிப்பிட்டுள்ளது. இதில், 45 சதவீதம் கோழி இறைச்சி என, கேரள அரசு கணித்துள்ளது. கடந்த 2009-10ம் நிதியாண்டில், கேரள மக்கள், கோழி இறைச்சிக்காக 2,844 கோடி ரூபாய் செலவிட்டுள்ளனர். இதில், 1,752 கோடி ரூபாய் அளவிலான தொகை, வெளிமாநில கோழிப் பண்ணையாளர்களுக்கு சென்றுள்ளது. தற்போது, வெளி மாநில கோழிகளுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளதால், கேரள எல்லைகளில் உள்ள சுங்கச் சாவடிகளில் தீவிர கண்காணிப்பிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## கச்சா பாமாயில் விலை குறைய வாய்ப்பு :இந்தோனேஷியா ஏற்றுமதி வரியை குறைத்தது



மும்பை : இந்தோனேஷியா அரசு, கச்சா பாமாயிலுக்கான ஏற்றுமதி வரியை குறைத்துள்ளது. இதனால், இதன் விலை குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோனேஷியா அரசு, கச்சா பாமாயில் ஏற்றுமதி மீதான வரியை, 9 சதவீதமாக குறைத்துள்ளது. இது, இன்று முதல் அமலுக்கு வருகிறது. தற்போது, கச்சா பாமாயில் ஏற்றுமதிக்கு 13.5 சதவீதம் வரி விதிக்கப் படுகிறது.
வரி குறைப்பால், இதன் விலை, கிலோவுக்கு, ஐந்து ரூபாய் வரை குறையும் என, எதிர்பார்க்கப் படுகிறது.எண்ணெய் உற்பத்திஉள்நாட்டில், தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, சமையல் எண்ணெய் உற்பத்தி இல்லாததால், நம் நாடு மிக அதிக அளவில், கச்சா பாமாயிலை இறக்குமதி செய்து வருகிறது. தற்போது, உள்நாட்டில், தாவர எண்ணெய்க்கான தேவை, 1.55 கோடி டன்னாக உள்ளது. இந்தியா, 90 லட்சம் டன்னுக்கும் அதிகமாக, தாவர எண்ணெய் வகைகளை இறக்குமதி செய்து வருகிறது.
குறிப்பாக, இந்தோனேஷியாவிலிருந்து தான், மிக அதிக அளவில் தாவர எண்ணெய் வகை கள், இறக்குமதியாகின்றன. கச்சா பாமாயில் மீதான ஏற்றுமதி வரி குறைக்கப்பட்டுள்ள தால், இது, இந்திய நுகர்வோருக்கு மிகவும் பயன் அளிப்பதாக இருக்கும் என, இந்திய எண்ணெய் வர்த்தகர்கள் தெரிவித்தனர். ஏற்றுமதி வரி இந்தோனேஷியா அரசு, கச்சா பாமாயில் ஏற்றுமதியை குறைக்கும் வகையில், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இதன் ஏற்றுமதி மீதான வரியை, 19 சதவீதமாக உயர்த்தியது. அதேசமயம், அந்நாட்டின் சுத்திகரிப்பு எண்ணெய் நிறுவனங்கள், பயன் அடையும் வகையில், சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான வரியை, 9 சதவீதமாக குறைத்தது. இது, இந்திய தாவர எண்ணெய் சுத்திகரிப்பு துறையை பாதித்தது. உலகளவில், பாமாயில் உற்பத்தியில், இந்தோனே ஷியா முதலிடத்தில் உள்ளது. இந்நாடு, ஒவ்வொரு மாதமும், சர்வதேச நிலவரத்திற்கேற்ப பாமாயிலின் ஏற்றுமதி விலையை மாற்றி அமைத்து வருகிறது. இறக்குமதி நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவ.,-அக்.,), செப்டம்பர் வரையிலான, 11 மாத காலத்தில், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, கடந்த பருவத்தின் இதே காலத்தை விட, 17.80 சதவீதம் அதிகரித்து, 77.74 லட்சம் டன்னிலிருந்து, 91.57 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
சென்ற செப்டம்பர் மாதத்தில் மட்டும், நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி, 9.12 லட்சம் டன்னிலிருந்து, 9.94 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதில், சமையல் எண்ணெய் இறக்குமதி, 9.76 லட்சம் டன்னாகவும், இதர எண் ணெய் வகைகளின் இறக்குமதி, 17,495 டன்னாகவும் இருந்தது. நடப்பு எண்ணெய் பருவத்தில், இந்தோனேஷியாவின் கச்சா பாமாயில் உற்பத்தி, 6-10 சதவீதம் அதிகரித்து, 2.50 - 2.60 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப் பட்டுஉள்ளது.

## காபி உற்பத்தி குறையும்



நடப்பாண்டில், காபி பூ பூப்பதற்கு முன்பான மழைப் பொழிவு 40 சதவீதம் குறைந்துள்ளது. இதனால், சென்ற ஆண்டைப் போலவே, நடப்பாண்டிலும், காபி உற்பத்தி, 3.14 லட்சம் டன்னிற்கும் குறைவாகவே இருக்கும் என, காபி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும், காபி வாரியம், நடப்பாண்டில் இதன் உற்பத்தி 3.25 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பீடு செய்துள்ளது. இதில், அராபிகா வகை காபி உற்பத்தி 1.04 லட்சம் டன்னாகவும், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி 2.21 லட்சம் டன்னாகவும் உள்ளது. அதேசமயம், அராபிகா காபி உற்பத்தி 85 - 90 ஆயிரம் டன்னாகவும், ரோபஸ்டா காபி உற்பத்தி 2.10 லட்சம் டன் என்ற குறைந்த அளவில் தான் இருக்கும் என, கர்நாடக காபி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நடப்பாண்டில், ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலத்தில், நம்நாடு 2.81 லட்சம் டன் காபியை ஏற்றுமதி செய்துள்ளது. இந்த ஏற்றுமதி, இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலத்தில், 3.04 லட்சம் டன்னாக அதிகரித்து காணப்பட்டது. ஆக, நடப்பாண்டில் இதன் ஏற்றுமதி, 7.67 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதே காலத்தில், மதிப்பின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, 4,239 கோடி ரூபாயிலிருந்து, 4,231 கோடி ரூபாயாக குறைந்துள்ளது. எனினும், சென்ற 2011ம் ஆண்டில், ஒரு டன் காபி 1,39,456 ரூபாயாக இருந்த நிலையில், நடப்பாண்டில் இதன் விலை, 1,50,764 ரூபாயாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

## கொப்பரை பற்றாக்குறையால் தேங்காய் எண்ணெய் விலை உயர்வு



கொச்சி : கொப்பரை வரத்து குறைந்ததால், தமிழகம் மற்றும் கேரளாவில், தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்துஉள்ளது.கடந்த ஒரு சில வாரங்களாக, தொடர்ந்து மழை பெய்து வருவதால், சந்தைகளுக்கு கொப்பரை வரத்து மிகவும் குறைந்துள்ளது. இதன் காரணமாகவே, தேங்காய் எண்ணெய் விலை உயர்ந்துள்ளது என, எண்ணெய் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 60 ரூபாயாகவும், கேரளாவில், 62 ரூபாயாகவும் உள்ளது. ஆயுத பூஜை காரணமாக, மேற்கண்ட இரு மாநிலங்களிலும், கொப்பரை வரத்து குறைந்திருந்தது. தற்போது தொடர் மழையால், இதன் வரத்து மேலும் குறைந்துள்ளது. தமிழகத்தில் ஒரு குவிண்டால் கொப்பரையின் விலை, 4,200 ரூபாயாகவும், கேரளாவில், 4,300 ரூபாயாகவும் உள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

31.10.2012 P.M

01.11.2012 A.M

## 4 லட்சம் ஏக்கர் சம்பா மூழ்கியது



நாகை: நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தொடர் கன மழையால் 4 லட்சம் ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கியது.நாகை மாவட்டத்தில் உள்ள 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட விசைப்படகுகளும், 3 ஆயிரம் பைபர் படகுகளும், 1,500 கட்டுமர மீனவர்களும் நேற்று 3வது நாளாக கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. மாவட்டத்தில் பல இடங்களில் மரங்கள் முறிந்து

விழுந்தன. 6 மின் கம்பங்களும் சாய்ந்தன. சுனாமி குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்தது. மாவட்டத்தில் 3 லட்சம் எக்டேர் பரப்பளவில் சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளன.திருவாரூர்: கடந்த 3 நாட்களாக மாவட்டத்தில் இடைவிடாது மழை பெய்ததால் 1 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் மழை நீரில் மூழ்கியுள்ளன. புயல் காரணமாக பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கினர். சாலைகளில் வாகன போக்குவரத்து குறைந்தே காணப்பட்டது.தொடர் மழையால் திருவாரூர் தியாகராஜர் கோயில் கமலாலய தெப்பக்குளத்தின் வடகரை சுற்றுச்சுவர் கடந்த 23ம் தேதி 66 அடி நீளத்திற்கு இடிந்து விழுந்தது. இடிந்த பகுதி தற்காலிகமாக மணல் மூட்டைகளை கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வழியே போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று பெய்த கனமழை காரணமாக குளத்தின் வடகரை பகுதியில் மேலும் 25 அடி நீளத்திற்கு சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது.

தஞ்சையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று மாலை வரை பலத்த காற்றுடன் இடைவிடாது கனமழை கொட்டியது. இதனால் தஞ்சை களிமேடு, சக்கரசாமந்தம், தென்னங்குடி, பள்ளியேறி, திருவையாறு அருகே கண்டியூர், திருப்பூந்துருத்தி, ஒரத்தநாடு அருகே மேலஉளூர், பொன்னாப்பூர், தென்னமநாடு போன்ற பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்கள் மூழ்கியுள்ளன. ஏற்கனவே குறுவையை இழந்து பொருளாதார ரீதியில் கடுமையான பாதிப்பில் சிக்கியுள்ள விவசாயிகள், தற்போதைய மழையால் பயிர்கள் பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். மேலும் இடைவிடாமல் தொடர்ந்து பெய்து வரும் மழையாலும், குளிர்காற்று வீசுவதாலும் சம்பா சாகுபடி பணிகளில் ஈடுபட முடியாமல் விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் தவித்து வருகின்றனர். தஞ்சை, பாபநாசம், ஒரத்தநாடு உள்ளிட்ட பகுதிகளில் அறுவடைக்கு தயாராக இருந்த 100 ஏக்கர் குறுவை பயிர் மழையால் சாய்ந்துள்ளது.

எளிதில் நீர்வடிய வசதியாக கல்லணையில் இருந்து காவிரி மற்றும் வெண்ணாறுகளில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 37 மீன்பிடித் துறைமுகங்களில் 2 ஆயிரம் பைபர் படகுகள் மற்றும் 203 விசைப்படகுகள் கரைகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. 7 ஆயிரம் மீனவர்கள் 5வது நாளாக நேற்றும் கடலுக்குச் செல்லவில்லை. அதிகபட்சமாக திருப்பூண்டியில் 175 மிமீ பதிவானது.ஏற்காடு: ஏற்காடு பகுதியில் மின்சாரம் தடை செய்யப்பட்டதால், 45 கிராமங்கள் இருளில் மூழ்கின. கடுமையான குளிர் நிலவுவதால், மக்கள் வெளியேவராமல்,

வீடுகளுக்குள்ளேயே முடங்கினர். மலைப்பாதை முழுவதும் இருளில் மூழ்கியது. மலைப்பாதையில் திடீர் அருவிகள் உருவாகியுள்ளன. 7வது கொண்டை ஊசி வளைவில், தடுப்பு சுவர் சரிந்து விழுந்தது. போக்குவரத்து பாதிக்கப்பட்டது.வேலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. சேண்பாக்கம், திடீர் நகர், முள்ளிப்பாளையம், வசந்தபுரம் போன்ற தாழ்வான பகுதிகளில் குடியிருப்புகளை சுற்றி மழைநீர் தேங்கியுள்ளது. 519 ஏரிகளில் அரக்கோணம் தாலுகாவில் மட்டும் 9 ஏரிகளில் 25 சதவீதம் அளவுக்கு நீர் நிரம்பியுள்ளது. காவேரிப்பாக்கம், மகேந்திரவாடி, உதயேந்திரம் ஏரிகளில் இப்போதுதான் தண்ணீர் வந்து கொண்டுள்ளது. மற்ற ஏரிகள் இன்னும் வறண்ட நிலையிலேயே கிடக்கின்றன.

## நவம்பர் 15 வரை தமிழகத்துக்கு 4 டிஎம்சி தண்ணீர்



புதுடெல்லி: நவம்பர் 15ம் தேதி வரை தமிழகத்துக்கு காவிரியில் 4 டிஎம்சி தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு காவிரி கண்காணிப்பு குழு உத்தரவிட்டுள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காவிரி ஆணையம் மற்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் தமிழகத்துக்கு நியாயமாக தர வேண்டிய தண்ணீரை தர கர்நாடக அரசு மறுத்து வருகிறது. கடந்த 11ம் தேதி டெல்லியில் நடந்த காவிரி ஆணைய கூட்டத்தில் அக்டோபர் 16ம் தேதி முதல் 31ம் தேதி வரை 8.85 டிஎம்சி தண்ணீர் விட கர்நாடக அரசுக்கு உத்தரவிடப்பட்டது. இதை கர்நாடக அரசு ஏற்கவில்லை.இந்நிலையில், காவிரி கண்காணிப்பு குழு கூட்டம் மத்திய நீர்வளத்துறை செயலாளர் துருவ் விஜய் சிங் தலைமையில் நேற்று நடந்தது. இதில் தமிழக தலைமை செயலாளர் தேபேந்திரநாத் சாரங்கி, பொதுப்பணித்துறை செயலாளர் சாய் குமார், கர்நாடக தலைமை செயலாளர் எஸ்.வி.ரங்கநாத் மற்றும் கேரளா, புதுவை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

காவிரியில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி நியாயமாக வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு வழங்கவில்லை என்று தமிழக அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, நவம்பர் 1ம் தேதி முதல் 15ம் தேதி வரை தமிழகத்துக்கு 4 டி.எம்.சி. தண்ணீர் வழங்க கர்நாடகாவுக்கு கண்காணிப்பு குழு உத்தரவிட்டது. கடந்த கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி வழங்க வேண்டிய நீரில் ஏதும் பற்றாக்குறை இருந்தால் அது குறித்து இன்று கணக்கிட்டு முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், தமிழக அரசு எழுப்பும் பிரச்னைகள் குறித்து 2ம் தேதிக்குள் மனு அளிக்கவும் கண்காணிப்பு குழு உத்தரவிட்டது. குழுவின் அடுத்த கூட்டம் நவம்பர் 15ம் தேதி கூடுகிறது. நேற்று கூடிய காவிரி கண்காணிப்பு குழுவின் முடிவை அமல்படுத்தும்படி கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

31st oct 2012 P.M

### உழவர் பாதுகாப்பு திட்ட விளக்க முகாம்

கும்மிடிப்பூண்டி,: கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் அடங்கிய கிராம பஞ்சாயத்துகளில் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நல உதவிகள் குறித்த விளக்க முகாம் கவரப்பேட்டையில் நேற்று நடந்தது.

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் தொழில் பயிற்சி நிறுவனங்களில் தங்கி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு அரசு வழங்கும் உதவித்தொகை, திருமண உதவி திட்டத்தில் ஆண், பெண்களுக்கு வழங்கும் தொகை, இயற்கையாக மரணம் அடைபவர்களின் குடும்பத்தாருக்கு அளிக்கும் தொகை, ஈமச்சடங்கு தொகை என அனைத்து உதவிகள் குறித்து கும்மிடிப்பூண்டி வருவாய் ஆய்வாளர் மணிகண்டன், விஏஓ கோபிநாதன் ஆகியோர் விளக்கினர்.

ஊராட்சி தலைவர் இந்திரா திருமலை, துணைத்தலைவர் கீதா, வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை குறைந்தது

அண்ணாநகர், : மழை காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டுக்கு நேற்று சுற்றுவட்டார பகுதியில் இருந்து வியாபாரிகள் குறைந்த எண்ணிக்கையில் வந்தனர். இதனால் காய்கறி விலைகள் குறைந்தன. மொத்த விலை கடைகளில் ஒரு கிலோ காய்கறி நேற்றைய விலை விபரம்: (அடைப்பு குறி: நேற்று முன்தினம்

விலை)

ரூபாயில்

கேரட் 22 (30)

நூக்கல் 15 (20)

பீட்ரூட் 10 (15)

சவ்சவ் 13 (15)

கோஸ் 6 (8)

பச்சை மிளகாய் 12 (15)

சேனை கிழங்கு 15 (18)

சேப்பங்கிழங்கு 18 (20)

கத்திரிக்காய் 10 (12)

வெண்டைக்காய் 14 (18)

சி. வெங்காயம் 40 (45)

பெ. வெங்காயம் 15 (18)

கோவக்காய் 15 (17)

முருங்கை காய் 25 (30)

முள்ளங்கி 12 (15)

தக்காளி 10 (12)

இன்றைய வேளாண் செய்திகள்

01.11.2012 A.M